அவர்கள் தங்களுடைய தேதியை உரிய அதிகாரிகளிடத்திலே தெரிவித்தால், அந்தப் பணி நிச்சயமாக விரைவிலே தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

17—

கைத்தறிப் பூங்கா

***12293—திரு. சபா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, புதுப்பேட்டையில் கைத்தறிப் பூங்கா அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நெல்லிக்குப்பம் தொகுதி, புதுப்பேட்டையில் கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசிடம் இல்லை.

திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது நெல்லிக்குப்பம் தொகுதியில் புதுப்பேட்டை பகுதி, கடந்த நூறாண்டுகளாக, கைத்தறித் தொழிலையே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதி. 3,000 கைத்தறிகள் வரை செயல்பட்டுக்கொண்டிருந்த அந்தப் பகுதியிலே, இப்போது 200, 300 கைத்தறிகள்தான் செயல்படுகின்றன. மிக நுட்பமாக அந்தத் தொழிலைச் செய்யக்கூடிய அந்த மக்கள் வேறு எந்தத் தொழிலுக்கும் செல்ல முடிவதில்லை; வேலைவாய்ப்பும் பெற முடிவதில்லை. எனவே, தமிழக அரசின்மூலம் ஒரு கைத்தறிப் பூங்காவினை அங்கே அமைத்து, 3,000 கைத்தறிகளை அங்கே அமைத்துக் கொடுத்து, அதற்கான கட்டமைப்புப் பணிகளையும் செய்து கொடுத்தால், அந்தப் பகுதியிலே வாழ்கின்ற 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மற்றும் ஏற்றுமதிக்கும்..

2007 ஜனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராஜேந்திரன், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. சபா. இராஜேந்திரன்: வருகிறேன்... பிரகாசமான வாய்ப்புகள உள்ளன. எனவே, ஒரு கைத்தறிப் பூங்காவினை அமைத்து, அந்தப் பகுதி மக்களுக்கு வாழ்வு அளிக்க இந்த அரசு முன்வருமா என்பதை, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கரூர் பகுதியிலே, முதன்முதலாக கைத்தறிப் பூங்கா அமைக்கிற நிகழ்ச்சிக்காக மாநில அரசிடமிருந்து மத்திய அரசிடம் ஒப்புதல் பெறுவதற்காக, முதலாவதாக ஒரு நிலை இங்கே தொடங்கப்பட்டிருக்கிறது. நெல்லிக்குப்பம் பகுதியிலே இருக்கிற புதுப்பேட்டையினுடைய கைத்தறி நெசவாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்கிற நிலையையும் கருத்திலேகொண்டு, அடுத்த ஒரு திட்டத்தின் முதல் நோக்கமாக இருக்கிற நிலையில், இந்தப் பகுதியிலே இதற்குரிய நிலை, துறையின்மூலமாக உருவாக்கப்படும் என்பதை இங்கே உங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மையும், நுணுக்கமும், தரமும் வாய்ந்த திருபுவனம் பட்டு, இந்தியாவில் சிறப்புப் பெற்ற ஒன்றாகும். கழக ஆட்சிக் காலத்தில், ஜனாதிபதி பரிசு பெற்ற நெசவாளர்கள் அதிகமாக அந்தப் பகுதியில் உள்ளனர். மேலும் திருநாகேஸ்வரம், அம்மாசத்திரம், தாராசுரம், அம்மாபேட்டை, கும்பகோணம் பகுதிகளில் கைத்தறி நெசவாளர்கள் ஏறத்தாழ 50 ஆயிரம் பேர் வாழ்கின்றனர். பட்டு கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறைய உள்ளன. அரசுக்கு நிதிச் சுமை இல்லாமல் ஏற்கெனவே 50 ஏக்கர் நிலப் பரப்பில் தொழிற்பேட்டை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருபுவனத்தின் முக்கியத்துவம் கருதி, அங்கு பட்டு கைத்தறிப் பூங்கா அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

[2007 ஜனவரி 23

மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனி கேள்வியாக கேட்கும்படி நம்முடைய உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், வேளாண் தொழிலுக்கு அடுத்த தொழிலாக இருக்கிற, வேலைவாய்ப்பினை உற்பத்தி பெருக்குகிற தொழில், நெசவுத் தொழில். இப்போது படித்த இளைஞர்கள் அல்லது வேளாண்மையிலே ஈடுபட்ட பல்வேறு பொதுமக்கள் எல்லாம், வேலைவாய்ப்பு இல்லாமல் உழன்று கொண்டு இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், இந்த நெசவுப் பூங்கா அமைப்பதன்மூலமாக, நெசவுப் பூங்காக்களை உருவாக்குவதன்மூலமாக, உற்பத்தியைப் பெருக்குவதோடு மட்டுமல்ல; வேலைவாய்ப்புகளை உருவாக்குகிற ஓர் அருமருந்தாக, அரிய வாய்ப்பாகத் தமிழ்நாட்டிலே இருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்பேரிலே, சிறப்பு முன்னோடித் திட்டமாக ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி, மாவட்டங்கள்தோறும் நெசவுப் பூங்கா உருவாக்குவதற்கு முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் படித்த பகுதி, கொளத்தூர் பகுதி; வேலைவாய்ப்பு இல்லாத பகுதி. அந்தப் பகுதியிலேயும், நங்கவல்லி பகுதியிலேயும் இப்படிப்பட்ட நெசவுப் பூங்கா அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், சென்னை, இருங்காட்டுக்கோட்டை, திருப்பூர், பல்லடம், ஆண்டிப்பட்டி மற்றும் குமாரபாளையம் பகுதிகளிலே இந்த விசைத்தறி நெசவுப் பூங்காக்களை அமைக்கிற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனுடைய தொடர்ச்சியாக நம்முடைய நாட்டிலே நெசவாளர்கள் அதிகம் இருக்கிற பகுதிகளிலே அவர்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்கிற தலைவர் கலைஞருடைய எண்ணத்தின் அடிப்படையில், அடுத்த திட்டத்திலே எந்தெந்தப் பகுதிகளில் தேவையோ, அதைத் துறையின்மூலமாக நாங்கள் தேடி, அந்தந்தப் பகுதிகளிலே ஜவுளிப் பூங்காக்களை அமைக்க இந்த அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.